IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 48/2015 |
| | | D/W's | : | 3 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | R. Vikramasimman | CASTE | : | |
| S/O. | T Ramaraj | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **09-02-2023**

## CHIEF EXAMINATION :

முதல் விசாரணை (பி.வா.சா.3 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

நான் வாடிப்பட்டி தாலுகாவில் தாலுகா சர்வேயராக கடந்த 12.02.2017ம் தேதியில் இருந்து நாளது தேதி வரை பணியாற்றி வருகிறேன். **(சாட்சி அனுமதி கோரிய மனுவில் தாலுகா தலைமை நில அளவையர் விசாரணை செய்தி வேண்டி பரிகாரம் கேட்கப்பட்ட நிலையில், தாலுகா சர்வேயர் சாட்சியம் அளிக்க வந்துள்ளதால் மேற்படி சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் ஆட்சேபணை செய்யப்பட்டது)** வழக்கிற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றதின் அடிப்படையில் ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை சாட்சியிடம் காட்டி மேற்படி புலப்பட வரைபடம் குலசேகரன்கோட்டை கிராமம், நத்தம் சர்வே எண்.558க்கு கட்டுப்பட்டவை என்றால் என்று சாட்சியானவர் வருவாய் ஆவணங்களான புலப்பட வரைபடத்தின் அசல் ஆவணத்தை கொண்டு பார்வையிட்டு சரி என்று சாட்சியம் அளித்தார்.

பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை சாட்சியிம் காட்டி உங்கள் தரப்பில் நில அளவை தொடர்பான புலப்படவரைபடம் குறித்தும், அதேபோல நீதிமன்ற ஆணையருடன் சொத்தை அளவீடு செய்யப்பட்டு, உங்கள் தரப்பில் கொடுக்கக்கூடிய புலப்பட வரைபடம் என்பது பி.வா.சா.ஆ.3-ஐ போன்று தான் உங்களால் ஆவணமாக கொடுக்க முடியும் என்றால் ஆம். பி.வா.சா.ஆ.3க்கு மாற்றாக வேறு வகையில் புலப்பட வரைபடம் ஆவணம் வழங்க இயலுமா என்றால் இல்லை, வழங்க முடியாது. பி.வா.சா.ஆ.3ல் உள்ள குறுக்கு கோடுகள் எதை குறிக்கிறது என்றால் கட்டிடங்கள் அமைந்துள்ளதாக குறிக்கப்பட்டுகிறது. குறுக்கு கோடுகள் இல்லாத பகுதிகள் காலியிடமாக இருக்கலாமா அல்லது சந்தாக இருக்கலாமா என்றால் காலியிடம் தான் ஆகும். சர்வே எண்.558/7க்குண்டான மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் 105 சதுர மீட்டர் ஆகும். 105 சதுர மீட்டர் என்பது பி.வா.சா.ஆ,3ல் எவ்வாறு

கணக்கிடுகிறீர்கள் என்றால் சாட்சி பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை பார்வையிட்டு 2 முதல் 4வது ஆப்செட் வரை வடபுறம், 13 மீட்டர், தென்புறம் 7.8 மீட்டர், மேற்குபுறம் 10.6 மீட்டர், கிழக்கு 5.4 மீட்டர் ஆகும்.

நத்தம் சர்வே எண்.558/7 என்பது மொத்த விஸ்தீரணம் நீங்க்ள சொல்வது போல் 105 சதுர மீட்டர் அல்ல, 0.98 சதுர மீட்டர் தான் அளவீடு என்று சொன்னால் தவறு. நத்தம் சர்வே எண்.558/7ன் வடபுறம் சர்வே எண்.558/4 அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.558/7 மற்றும் சர்வே எண்.558/4 என்பது கிழக்கு புறம் தெருவை பார்த்து அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.558/7ன் மேற்கு புற நீளம் 10.6 மீட்டரை ஒட்டி பகுதியில் உள்ள நபர்கள் யார் யார், யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் என்றால் சர்வே எண்.558/7ல் மேற்குபுறம் சர்வே எண்.558/2ல் அளவுகள் 0.6 மீட்டர், சர்வே எண்.558/5ல் அளவுகள் 6.8 மீட்டர், சர்வே எண்.558/8ல் அளவுகள் 3.2 மீட்டர் ஆகும். சர்வே எண்.558/7 மற்றும் சர்வே எண்.558/4 இரண்டு புல எண்களின் கிழபுறம் ஒரே நேர்கோட்டில் பார்த்து அமையவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.558/4யை காட்டிலும் சர்வே எண்.558/7 ஆனது ஒரே நேர்கோட்டில் அமையாமல் 0.8 மீட்டர் மேற்குபுறம் உள்ளடங்கி அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.558/7ல் அமைந்துள்ள கட்டிடங்களின் பரப்பளவு எவ்வளவு என்றால் 79 சதுர மீட்டர் ஆகும்.

சர்வே எண்.558/7ல் மேற்கு பகுதியில் ஒரு பொது சந்து அமைந்துள்ளது அது தெற்கு நோக்கி மதுரை மெயின்ரோட்டை சென்றடைகிறது என்று சொன்னால் அது தவறு. மேற்படி சந்து பொதுமக்களால் பயன்படுத்தி வரக்கூடிய பொது சந்தாக அமைந்துள்ளது என்றால் அது தவறு.

(ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை)

**<u>குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) : </u>09-02-2023**

நீங்கள் எந்த வருடம் முதன்முதலாக பணியில் சேர்ந்தீர்கள் என்றால் 04.04.2013 ஆகும். நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் எம்.ஏ. படித்துள்ளேன். நீங்கள் சாட்சியம் அளிக்க உங்களுடைய மேலதிகாரி அவர்களால் எழுத்துப்பூர்வமான அனுமதி ஏதும் உங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். உங்களுடைய அழைப்பாணையிலும் நீங்கள் தான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், நில அளவையர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அதனால் தாலுகா நில அளவையர் ஆவேன். அதனடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சி அனுமதி கோரி மனுவில் உள்ள பரிகாரத்திற்கும் உங்களுக்கு அனுப்பிய அழைப்பாணையில் கண்டுள்ள பரிகாரத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் முரண்பாடாக உள்ளதால் உங்களுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் அது சரியல்ல.

என்னென்ன ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் குலசேகரன்கோட்டை கிராமம் புலப்படம், அடங்கல் மற்றும் சிட்டா ஆகியவை கொண்டு வந்துள்ளேன். புலப்பட ஆவணம் எப்போது தயார் செய்யப்பட்டது என்றால் நத்தம் புலப்பட வரைபடம் 1991 - 1994ம் வருடம் தயார் செய்யப்பட்டது. நத்தம் புலப்பட ஆவணம் 1991 – 1994ல் தயாரிக்கப்பட்ட சமயத்தில் உங்களுக்கும் ஆவணத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். உங்களால் கொண்டு வரப்பட்ட நத்தம் புலப்பட வரைபட ஆவணம் என்பது 1994ம் வருடத்திற்கு பின்னிட்டு எந்தவித மாற்றமும் செய்யப்படாமல் உள்ள ஆவணம் என்றால் சரிதான். சர்வே எண்.558/12ல் தற்போது எத்தனை உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது, யார் யார் பெயரில் உள்ளது என்றால் சர்வே எண்.558/12ஏ என்பது ராமலிங்கம் மகன் சுப்பையா பெயரிலும், சர்வே எண்.558/12பி சுப்பையா மகன் சிவக்குமார் பெயரிலும் உள்ளது. சர்வே எண்.558 புலப்பட வரைபட ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றும், நேரில் சொத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.558ல் பொதுப்பாதை குறித்தோ சந்து குறித்தோ புலப்பட வரைபட ஆவணத்தில் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் அது தவறு.

புலப்பட வரைபட ஆவணத்தில் பொதுப்பாதை குறித்து மற்றும் சந்து குறித்து என்ன அடையாளம் காட்டுவீர்கள் என்றால் சந்து குறித்து எவ்வித அடையாளங்களும் காட்டப்படாது, பொதுப்பாதை குறித்து உட்பிரிவு எண் வழங்கப்பட்டு அரசு புறம்போக்கு என்று அடங்கலில் குறிப்பிடப்படும். சர்வே எண்.558/7 மற்றும் சர்வே எண்.558/4 சர்வே எண்558/5 மற்றும் சர்வே எண்.558/6 ஆகிய புல எண்களில் பொது பாதை குறித்தோ, பொது சந்து குறித்தோ புலப்பட வரைபட ஆவணத்தில் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களில் சந்து, பொதுப்பாதை ஏதும் இல்லை என்பதினால் தான் புலப்பட வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி